மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 169, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

169—

பருத்தி இறக்குமதி

***6859—திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திற்குத் தேவையான பருத்தி பற்றாக்குறையைச் சமாளிக்க வெளிநாட்டிலிருந்து தரமான பருத்தியை வருவிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு சுமார் 40 இலட்சம் பேல்கள் பருத்தி தேவைப்படுகிறது. ஆனால், தமிழகத்தில், மொத்தமே 5 முதல் 6 இலட்சம் பேல்கள் வரையே பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, தனியார் நூற்பாலைகள் வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து பருத்திக் கொள்முதல் செய்து நூல் உற்பத்தி செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. மா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை இந்தியாவிலே எல்லாத் துறைகளிலும் முதன்மையான மாநிலமாகக் கொண்டு வருவதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைப் பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. ராஜகோபால்.

திரு. ஆ. ராஜகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி சாகுபடியைப் பொறுத்த அளவிலே, அதிகரித்து வருகின்ற வேளாண்மை உற்பத்திச் செலவின் காரணமாக per acre yield,

2005 மார்ச் 16]

சமீப காலகட்டங்களிலே மிகக் குறைவாக இருந்ததனால், பருத்தி சாகுபடியினுடைய நிலப்பரப்பு, ஆண்டுகள் செல்லச் செல்ல மிகவும் குறைந்து வருகின்றது. இந்த விலைவாசி உயர்வினை, கட்டுப்படியாகின்ற விலை கிடைக்காத ஒரு சூழ்நிலையில் per acre–உடைய விளைச்சலை அதிகரித்தால் விவசாயிகளுடைய, அவர்களுக்குப் பருத்தி சாகுபடியிலே ஒரு ஆர்வம் ஏற்படும். அத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்கு சீனா, அமெரிக்கா போன்ற மேலைநாடுகளிலே per acre–பருத்தி என்பது 45 குவிண்டால் அளவுக்கு விளைச்சலை எடுக்கின்றார்கள். அந்தவகையிலே நமது தமிழ்நாட்டிலும் பருத்தி சாகுபடியிலே உற்பத்தியைப் பெருக்குகின்ற அளவுக்கு Bio-technology மூலமாக விதைகளை உற்பத்தி செய்து இங்கேயும் per acre yield–ஐ அதிக அளவிலே உற்பத்தி செய்வதற்கு அரசு முன்வருமா அல்லது அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே ஒரு ஹெக்டேருக்கு 330 கிலோ அளவில் பருத்தி விளைவிக்கப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி ஒரு ஹெக்டேருக்கு சுமார் 425 கிலோ அளவில் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 170, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

170—

சுற்றுலாத் தலம்

***18030—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள மனோரா சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?